தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 29 /பேரூ/2021

நாள் 03.12.2021

திரு. அ. முத்துப்பாண்டி,
பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பழனிசெட்டிபட்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி, கதவு எண்.7.3.6, காந்தாரியம்மன் தெரு, தெற்கு ஜெகநாதபுரம், பழனிசெட்டிபட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு. அ. முத்துப்பாண்டி என்பவரது 03.04.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 7.4.2021ல் பெறப்பட்டு 29/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி, கதவு எண்.7.3.6, காந்தாரியம்மன் தெரு, தெற்கு ஜெகநாதபுரம், பழனிசெட்டிபட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு. அ. முத்துப்பாண்டி என்பவர் தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி கோபிகிருஷ்ணா மற்றும் கிருஷ்ணா ஆகிய திரையரங்குகள் உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டம் அமல் செய்யப்பட்ட பின்பு (The Tamil Nadu Local Authorities Entertainments Tax Act, 2017 (Tamil Nadu Act 20 of 2017) has been enacted with effect from 01.07.2017) பழனிசெட்டிபட்டி பேரூராட்சிக்கு ஐந்து ஆண்டுகளாக 8 சதவிகித கேளிக்கை வரி இன்றைய தேதிவரை பேரூராட்சிக்கு செலுத்தப்படவில்லை என்றும், உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டம் 2017–ன்படி, பழனிசெட்டிபட்டி பேரூராட்சிக்கு ஜூலை 2017 முதல் 17.01.2021 வரை 5 வருடங்களாக 8% கேளிக்கை வரி கட்டாமல், வரி ஏய்ப்பு செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். திரையரங்குகளின் சர்வே எண்.1/3, 23/1A மற்றும் 23/1C கிரையம் முடிப்பதற்கு

ஆட்சேபனை கேட்டு இடத்தை வாங்குபவர்கள் பத்திரிக்கை விளம்பரம் செய்துள்ளதால் The Tamil Nadu Revenue Recovery Act, 1864–ன்படி அரசுக்கு செலுத்தவேண்டிய சுமார் 50 லட்சத்திற்கான கேளிக்கை வரியை வசூலிக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014–இன்படி நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார். மேலும், சார் பதிவாளர், பதிவுத்துறை, தேனி அவர்கள் பதிவுத்துறைச் சட்டம் 1908–ன்கீழ் பிரிவு 68(2)–ன்படி நடவடிக்கை எடுத்து கோபிகிருஷ்ணா மற்றும் கிருஷ்ணா தியேட்டர்களின் சர்வே எண்.1/3, 23/1A மற்றும் 23/1C கிரையம் முடிப்பதற்கு வில்லங்கம் செய்து, பத்திரப்பதிவை நிறுத்திவைத்து, அரசுக்கு வரவேண்டிய வருவாயை வசூலித்தும், வருவாய் இழப்புக்கு காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஆணையிடக்கோரியும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 03.08.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 28.6.2021 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மேற்கண்ட இருவரும் 03.08.2021 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

முறையீட்டு மனுதாரர் திரு. A. முத்துப்பாண்டி இம்முறைமன்ற நடுவத்தின் 3.8.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் “தேனி மாவட்டம், பழனிசெட்டிப்பட்டி பேரூராட்சியில் உள்ள திரையரங்குகளான கோபிகிருஷ்ணா மற்றும் கிருஷ்ணா திரையரங்குகள் வரி ஏய்ப்பு செய்துள்ளன. பேரூராட்சிக்குச் சேரவேண்டிய 8 சதவீத கேளிக்கை வரி உரிமையாளர்களால் செலுத்தப்படவில்லை. எனவே, பழனிசெட்டிப்பட்டி பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்நேர்வு தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடமும் மனு அளித்துள்ளேன். எனவே, தேனி மாவட்டம், பழனிசெட்டிப்பட்டி பேரூராட்சிக்கு வருவாய் வரும்பொருட்டு மேற்கண்ட இரண்டு திரையரங்குகளின் உரிமையாளர்களிடம் 2017–ஆம் ஆண்டு முதல் ஐந்து (5) ஆண்டுகளுக்கான கேளிக்கை வரி மற்றும் GST–ஐ வசூல் செய்திட ஆணையிடுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட வருடங்களுக்கு கேளிக்கை வரி DCR (Daily Collection Report) அடிப்படையில் வசூல் செய்யப்படவேண்டும் எனவும் இம்முறைமன்றத்தை வேண்டிக்கொள்கிறேன்.” என்று தெரிவித்துள்ளார். மேலும், 3.8.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் திரு. A. முத்துப்பாண்டி தமது கைப்பட எழுதி அளித்துள்ள 3.8.2021 நாளிட்ட வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

“2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கு கேளிக்கை வரியை DCR (Daily Collection Report) அடிப்படையில் வசூலிக்க வேண்டுகிறேன். திரையரங்கில் இரண்டு கடைகள் செயல்பட்டது. அதற்கான தொழில்வரி மேற்கண்ட ஆண்டுகளுக்கு வசூலிக்க வேண்டுகிறேன். தாமதமாக வரி செலுத்துவதற்கு, ஒவ்வொரு நாட்களுக்கும் 2 சதவிகிதம் DCR அடிப்படையில் வட்டியும் வசூலிக்க வேண்டுகிறேன். 2017 முதல் 2021 வரை ஐந்து (5) ஆண்டுகள் வரியை செலுத்தாததற்கு அபராதமாக, ஆண்டுக்கு இரண்டு லட்சம் வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு 10.00 லட்சம் ரூபாயை (ரூபாய் பத்து லட்சம்

மட்டும்) முதல்வரின் கொரோனா நிதிக்கு செலுத்த முறைமன்ற நடுவர் உத்தரவிடவேண்டுகிறேன். திரையரங்குகள் தற்போது EC-படி 6.00 கோடிக்கு விற்கப்பட்டுள்ளது. திரையரங்கை வாங்கியவரால் இடிக்கப்பட்டுவிட்டது. அந்த இடத்தில் பேரூராட்சி அறிவிப்பு செய்து, வில்லங்கம் ஏற்படுத்தி, வரியையும் அபராதத் தொகையையும் செலுத்தும்வரை எந்தவித பணியும் நடைபெறாமல் தடுக்க செயல் அலுவலரை பணிக்க வேண்டுகிறேன். DCR ரிப்போர்ட்டை திரையரங்கு உரிமையாளர்கள் காண்பித்து வரிசெலுத்தாததால் திரைப்படம் ஒளிபரப்பு செய்த QUBE நிறுவனத்திடம் 2017–லிருந்து 2021 வரை DCR விவரம் பெற்று அதன் அடிப்படையில் வரிவசூலிக்க வேண்டுகிறேன். திரையரங்கு உரிமையாளர்கள் திரையரங்கை விற்பனை செய்துள்ளதால், திரையரங்கு உரிமையாளர்கள் மீதும், திரையரங்கு மற்றும் இடத்தை வாங்கியவர் மீதும் RR Act 1890–ன்படி நடவடிக்கை எடுத்து, அரசுக்கு வரவேண்டிய வருவாயை வசூலிக்க பணிக்குமாறும், வருவாயை வசூலிக்கத் தவறிய செயல் அலுவலர்கள் மீது துறை நடவடிக்கை எடுக்கவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

3. பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 3.8.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் “தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் உள்ள கோபிகிருஷ்ணா மற்றும் கிருஷ்ணா ஆகிய இரண்டு திரையரங்குகளின் உரிமையாளர்களிடமிருந்து 2017 முதல் 2021–ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு கேளிக்கை வரியாக கோபிகிருஷ்ணா திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து ரூ.3,66,100/– (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தாறாயிரத்து நூறு மட்டும்) மற்றும் கிருஷ்ணா திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து கேளிக்கை வரியாக ரூ.1,56,800/– (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எண்ணூறு மட்டும்) 16.3.2021 அன்று வரைவோலை (Demand Draft dated 15.3.2021) மூலம் வசூலிக்கப்பட்டு, பேரூராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்மன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட கேளிக்கை வரி செலுத்தியதற்கு பேரூராட்சியின் மூலம் திரையரங்கின் உரிமையாளர்களுக்கு அளிக்கப்பட்ட ரசீதின் நகல் மற்றும் பேரூராட்சியின் கணக்கில் மேற்கண்ட கேளிக்கை வரி தொகை வங்கியில் செலுத்தப்பட்டதற்கான வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல் ஆகியவற்றையும் இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். மேற்கண்ட கேளிக்கை வரி காலம்தாழ்த்தி வசூல் செய்ததற்காக, மேற்கண்ட திரையரங்குகளின் உரிமையாளர்களிடமிருந்து, பேரூராட்சியின் மூலம் அபராதத் தொகை ஏதேனும் வசூல் செய்யப்பட்டுள்ளதா என்கின்ற விவரத்தை பேரூராட்சியின் பதிவேடுகளை சரிபார்த்த பின்னர் இம்மன்றத்தின் முன் ஒருவார காலத்திற்குள் சமர்ப்பிக்கிறேன் என உறுதியளிக்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

4. பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் நேரடி விசாரணையின்போது அளித்துள்ள வாக்குமூலத்தின் அடிப்படையில், அவர் அனுப்பிவைத்துள்ள 31.8.2021 நாளிட்ட அறிக்கையில் கிருஷ்ணா திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து 1.7.2017 முதல் 17.01.2021 வரை வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரித் தொகையான ரூ.1,56,800/–க்கான

2% அபராதக் கட்டணம் ரூ.3,136/–ஐ (ரூபாய் மூன்றாயிரத்து நூற்று முப்பத்து ஆறு மட்டும்) செலுத்துச் சீட்டு எண்.387/2021–2022 நாள் 27.8.2021–ன்படியும், கோபி கிருஷ்ணா திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து 1.7.2017 முதல் 17.01.2021 வரை வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரித்தொகையான ரூ.3,66,100/–க்கு 2 சதவிகித அபராதக் கட்டணம் ரூ.7,322/–ஐ (ரூபாய் ஏழாயிரத்து முன்னூற்று இருபத்தி இரண்டு மட்டும்) செலுத்துச்சீட்டு எண்.388/2021–2022 நாள் 27.8.2021–ன்படியும், மொத்தம் ரூ.10,458/– (ரூபாய் பத்தாயிரத்து நானூற்று ஐம்பத்தி எட்டு மட்டும்) வசூல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் அவர் கைபட எழுதி அளித்துள்ள வாக்குமூலம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் வாக்குமூலம், அவரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பேரூராட்சியின் முக்கிய வருவாய் ஆதாரங்களின் அடிப்படையிலேயே அப்பகுதிவாழ் மக்களின் அடிப்படை வசதிகளான சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் கால்வாய்கள் அமைத்தல் போன்ற அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், 2017 முதல் 2021 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு கிருஷ்ணா மற்றும் கோபிகிருஷ்ணா ஆகிய இரண்டு திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து கேளிக்கை வரியினை வசூலிக்க பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர், அந்தந்த ஆண்டுக்கான வரி இனங்களை கண்டறிந்து, திரையரங்கு உரிமையாளர்களுக்கு அறிவிப்பு அளித்து, வரியை வசூல் செய்திருக்கவேண்டும்; ஆனால் மேற்கண்ட இரண்டு திரையரங்கு உரிமையாளர்களும் மேற்கண்ட இரண்டு திரையரங்குகளை விற்பனை செய்வது உறுதிபடுத்தப்பட்டு, அத்திரையரங்குகளை கிரையம் பெறுபவர்களால் எவருக்கேனும் அச்சொத்தினை கிரையம் பெறுவதற்கு ஆட்சேபனை இருந்தால், அதுகுறித்து 7 நாட்களுக்குள் தகுந்த ஆவணங்களுடன் தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளுமாறு, 21.2.2021 நாளிட்ட தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பு பிறப்பிக்கப்பட்ட பின்னரே, 2017 முதல் 2021 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு கேளிக்கை வரியாக கோபிகிருஷ்ணா திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து ரூ.3,66,100/– (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தாறாயிரத்து நூறு மட்டும்) மற்றும் கிருஷ்ணா திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து கேளிக்கை வரியாக ரூ.1,56,800/– (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எண்ணூறு மட்டும்) 16.3.2021 அன்று வரைவோலை (Demand Draft dated 15.3.2021) மூலம் வசூலிக்கப்பட்டு, பேரூராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இது காலம் கடந்த செயல் என்பது மட்டுமல்லாமல், அத்திரையரங்குகளை விற்பனை செய்வது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது அறிவிப்புக்குப் பின்னரே, அத்திரையரங்கு உரிமையாளர்களால் கேளிக்கை வரி செலுத்தப்பட்டுள்ளதால், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது கடமையை சரிவர கவனிக்காமல் அலட்சியமாகவும், தமது பணியில் மெத்தனமாகவும் செயல்பட்டுள்ளார் என்று இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், மேற்கண்ட இரு திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்தும் தற்போது நடைமுறையிலுள்ள கேளிக்கை வரிச் சட்டத்தின்படி காலதாமதமாக கட்டப்பட்ட 8% கேளிக்கை வரிக்கு அபராதக் கட்டணத்தை வசூலிக்கவும் செயல் அலுவலர் தவறியுள்ளார். செயல் அலுவலர்

இம்முறைமன்ற நடுவத்தில் **3.8.2021** அன்று நடைபெற்ற நேரடி விசாரணையின்போது, கிருஷ்ணா மற்றும் கோபிகிருஷ்ணா ஆகிய இரண்டு திரையரங்கு உரிமையாளர்களும் பேரூராட்சிக்குச் செலுத்தவேண்டிய கேளிக்கை வரியினை காலதாமதமாக செலுத்தியுள்ள நிலையில், கேளிக்கை வரிக்கான அபராதக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா என இம்முறைமன்ற நடுவம் எழுப்பிய கேள்வியைத் தொடர்ந்தே, கேளிக்கை வரி குறித்து ஆய்வுசெய்து தமது அறிக்கையினை அளிப்பதாக செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளதும், அதனைத் தொடர்ந்து மேற்கண்ட இரண்டு திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து காலதாமதமாக செலுத்திய கேளிக்கை வரித்தொகையின் மீது 2% அபராதத் தொகையை கிருஷ்ணா திரையரங்கு உரிமையாளர்ளிடமிருந்து ரூ.3,136/–ம், கோபிகிருஷ்ணா திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து ரூ.7,322/–ம், ஆக மொத்தம் ரூ.10,458/– (ரூபாய் பத்தாயிரத்து நானூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) 27.8.2021–ல் பழனிசெட்டிபட்டி பேரூராட்சியால் வசூலிக்கப்பட்டு, பேரூராட்சியின் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால், பேரூராட்சிக்கு சேரவேண்டிய வருவாய் இனங்கள் குறித்து கவனமுடன் செயல்படவேண்டிய செயல் அலுவலர் தமது கடமையை சரிவர செய்யத்தவறியுள்ளார் என தெளிவாகிறது. எனவே, மேற்படி காலதாமதத்திற்குப் பொறுப்பான பழனிசெட்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர்கள் மீது, உரிய விதிகளின்கீழ், துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்ட 3.8.2021 நாளிட்ட வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் கிருஷ்ணா மற்றும் கோபிகிருஷ்ணா ஆகிய இரண்டு திரையரங்கு உரிமையாளர்களாலும், மாதா மாதம் டிக்கெட் வசூலின் மூலம் பெறப்பட்ட தொகையின் அடிப்படையில் 18 சதவிகித GST செலுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இந்த மனு இம்முறைமன்றத்திற்கு வந்திருக்காவிடில், பேரூராட்சி செயல் அலுவலர்கள் இதில் எவ்வித முயற்சியும், நடவடிக்கையும் எடுத்திருக்கமாட்டார்கள் என்பது தெளிவு. பணிகளில் கவனக்குறைவாகவும், பேரூராட்சியின் வருவாய் இழப்பிற்கு காரணமாயிருந்த செயல் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பேரூராட்சி ஆணையாளரைக் கோரி, இப்புகார் மனு மீதான மேல்நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைக்கலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)- x x x x x

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. அ. முத்துப்பாண்டி,
கதவு எண்.7.3.6, காந்தாரியம்மன் தெரு,
தெற்கு ஜெகநாதபுரம், பழனிசெட்டிபட்டி–625 531

செயல் அலுவலர், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்–625 531

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது/–

செயலாளர்